பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 09 | சனிக்கிழமை | 23.03.2024 | அதிர்வு 235 |
| --- | --- | --- | --- | --- | --- |


யாழ். போதனா வைத்தியசாலையில்

## சிகிச்சை பெற்று வந்தவர் கீழே வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவர் திடீரெனக் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று 06

# வடக்கு தமிழ் மக்களின் வாக்குகள் சஜித்துக்கே!



## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

"வடக்கு தமிழ் மக்கள் ஒரு போதும் இனவாதக் கட்சிகளுக்கு வாக்களிக்கமாட்டார்கள். எனவே, இனவாதிகள் இல்லாத கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கே ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் ஆதரவு வழங்குவார்கள்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ 75 இலட்சம் வாக்குகளைப் பெறுவார் எனத் தெரியவந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் 06

# இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வையுங்கள்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்




(எஸ்.நிதர்ஷன்)

**"ஜனாதிபதித் தேர்தலில் நிற்பவர்கள் யாராக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வையுங்கள். அது பற்றி பரிசீலிப்போம்."**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

**கிளிநொச்சியில் அமரா பெண்கள் ஒன்றியத்தின் மகளிர் தின நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** 06

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம்

### நேற்று திறந்து வைத்தார் ஜனாதிபதி ரணில்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. 06




'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

– என்றான் செந்நாப் போதகன் திருவள்ளுவப் பெருந்தகை.

நேற்று நடந்த ஒரு நிகழ்வைப் பார்த்த போது, வள்ளுவனின் இந்தக் குறளை நமது நாடும் மக்களும் வெகு ஸிம்பிளாக மறந்து செயற்படுகின்றார்கள் என்பது புரிந்தது. அது மனவேதனையையும் தந்தது.

மந்திகை வைத்தியசாலையில் ஐந்நூறு கோடி ரூபா செலவில் நெதர்லாந்து அரசின் நிதிப் பங்களிப்பில், நவீன வசதிகள் 06

# வெளிநாட்டவர் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை விமான நிலையத்திலேயே பெற்றுக்கொள்ள வாய்ப்பு

## இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணா தகவல்

**“இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் விமான நிலையத்திலிருந்து வெளியில் வரும்போதே சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.”**

**-இவ்வாறுபோக்குவரத்துஇராஜாங்கஅமைச்சர் லசந்த அழகியவண்ணா தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வீதி விபத்துக்களை மட்டுப்படுத்தும் வகையிலான பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் எனவுன் அறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கும் காப்புறுதி நிறுவனங்களுக்கும் இடையில் இடம்பெற்ற தொடர் கலந்துரையாடலின் பலனாக நீதிமன்ற நடவடிக்கையின்றி விரைவாக இழப்பீடு வழங்கும் வேலைத் திட்டம் மார்ச் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் முதலாம் திகதிக்கு பின்னரான விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

விபத்து இடம்பெற்று ஒரு வருடத்திற்குள் சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தின் எந்தவொரு கிளையிலிருந்தும் அதிகபட்சமாக 05 லட்சம் ரூபா வரையான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாறாக பாதிக்கப்பட்டவர் மேலதிகமான இழப்பீட்டுத் தொகையை பெற எதிர்பார்க்கும் பட்சத்தில் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை நாட வேண்டும்.

இந்த நடவடிக்கை குறித்து இலங்கை பொலிஸார் மற்றும் பிரதேச செயலாளர்கள் கிராம சேவை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குடிவரவுத் திணைக்களம், விமானப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியன இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் விமான நிலையத்தில் விண்ணப்பிப்பதற்கும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அதன்படி மாதமொன்றுக்கான சாரதி அனுமதி பத்திரங்களுக்கு 25 டொலர்களும், மூன்று மாதங்களுக்கான சாரதி அனுமதி பத்திரங்களுக்கு 50 டொலர்களும், 6 மாதங்களுக்கு 75 டொலர்களும், ஒரு வருடத்திற்கு மேலான அனுமதி பத்திரங்களுக்கு 200 டொலர்களும் அறவிடப்படவுள்ளது.

மேலும், ஏப்ரல் 10 முதல் திறன் மதிப்பீட்டு புள்ளிகள் வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் வரையில், போக்குவரத்து விதி மீறல்களுக்கு அபராதம் செலுத்தும் தபால் நிலையங்கள், குற்றத்தின் தன்மை, உரிய பொலிஸ் நிலையம், சாரதி அனுமதிப் பத்திர விவரம் மற்றும் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட தகவல்கள் தேசிய வீதி போக்குவரத்து அதிகார சபையின் தகவல் கட்டமைப்பின் இணைக்கப்படவுள்ளன.

அந்த தரவுகளின்படி, விபத்து குறித்த குறுஞ்செய்தி மற்றும் விபத்து தொடர்பான காணொலிகள் தேசிய வீதி போக்குவரத்து பாதுகாப்பு அதிகார சபையினால் உரிய தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலம் அனுப்பப்படும்.

வீதி விபத்துகளைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன்படி, கல்வி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவை இணைந்து ஏப்ரல் 3ஆம் திகதி முதல் ஒவ்வொரு பாடசாலையிலும் வீதிப் பாதுகாப்பு ஒன்றியங்களை நிறுவ தீர்மானிக்கப்பட்டளது. பல்வேறு படிமுறைகளின் கீழ் இத்திட்டத்திற்காக பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதக்கம் வெள்வோர் சாரதி அனுமதி பத்திரத்திற்கான எழுத்துமூல பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர். கல்வியற் கல்லூரிகளிலும் வீதி போக்குவரத்து தொடர்பிலான ஒன்றியங்களை நிறுவி மேற்கூறியது போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்திருக்கிறோம்.

அதற்கு மேலதிகமாக வீதி விதிமுறைகள் மற்றும் வீதி போக்குவரத்து தொடர்பிலான அறிவை பாலர் பாடசாலை மட்டத்தில் பெற்றுகொடுப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

தேசிய வீதிப் போக்குவரத்து அதிகார சபை 1998 இல் நிறுவப்பட்டது. தற்போதைய நிலைமைகளுக்கமைய அதற்காக ஏற்பாடுகளை செய்ய முடியாது என்பதால் தேசிய வீதிப் போக்குவரத்து அதிகார சபையை வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவாக மாற்றியமைப்பதற்கான அங்கீகாரத்தை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கொண்டுள்ளார். அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.” – என்றார்.



# திருக்கோவில் வைத்தியசாலைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட 6 பேர் விளக்கமறியலில்!

(கனகராசா சரவணன்)

திருக்கோவிலில் மரதன் ஓடிய 16 வயது மாணவன் உயிரிழந்தமை தொடர்பாக வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, வைத்தியசாலைக்குச் சேதம் ஏற்படுத்தினர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 6 பேரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரையுமான 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி திருக்கோவில் மெதடிஸ்த மாகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய திருக்கோவில் 3 ஆம் பிரிவு துரையப்பா வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய ஜெயக்குமார் விதுர்ஜன் என்ற மாணவன் மயங்கிவீழ்ந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச் சம்பவத்தையடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கவலையீனத்தால் இந்த மாணவன் உயிரிழுந்தான் எனக் குற்றச்சாட்டு தெரிவித்து வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று திரண்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வைத்தியசாலை மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியதில் கட்டடத்தின் பல ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து தேசமடைந்தன. வைத்தியசாலை பெயர் பலகையும் உடைத்துசேதப்படுத்தப்பட்டது. அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார், விசேடஅதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டகாரர்கள் 5 மணித்தியால ஆர்ப்பாட்டத்தையடுத்து அங்கிருந்து வெளியேறினர்.

அதனை தொடர்ந்து உயிரிழந்த மாணவன் அதிக வெப்பம் காரணமாக உயிரிழந்தான் எனப் பிரேத பரிசேதனையில் கண்டறியப்பட்டதுடன் உடல் கூறுகள் அரசபகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன. சடலம் கடந்த 12 ஆம் திகதி உறவினரிடம் கையளிக்கப்பட்டது.




இந்த நிலையில் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனவும், அரச சொத்தான வைத்தியசாலைக் கட்டடத்திற்கு சேதம் விளைவித்தவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் தெரிவித்து கடந்த 10 நாள்களுக்கு மேல் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வைத்தியசாலை செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்துள்ளன.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு சேதம் விளைவித்த 50 பேரை இனங்கண்டு கொண்ட பொலிஸார், பெண் ஒருவர் உட்பட 6 பேரை நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்து அவர்களை அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரையுமான 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை வைத்தியசாலைக்கு சேதம் விளைவித்த ஏனைய 45 பேரை தேடிக் கைது செய்யும் நடவடிக்கையை தாங்கள் மேற்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருத்தத்துக்கு ரூ.5 கோடி வழங்கியும் ‘நெடுந்தாரகை’ சேவைக்கு வரவில்லை




(ந.லோகதயாளன்)

நெடுந்தாரகைப் படகு திருத்தத்திற்கென 5 கோடி ரூபா பணம் செலுத்தப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டபோதும் படகு இன்னும் சேவைக்கு வரவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் ஆளுகையில் உள்ள நெடுந்தாரகைப் படகு நெல்சிப் திட்டத்தின் கீழ் 15 கோடி ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டபோதும் அது இயங்கு நிலையில் பெரும் நெருக்கடியை கண்டுவந்தது.

இச்சூழலில் 2022 ஆம் ஆண்டு ஒன்றரைக் கோடி ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டது. மீண்டும் 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பழுதிற்காக ஆரம்பத்தில் 3 கோடி ரூபா கோரப்பட்டு இறுதியில் மொத்த திருத்தச் செலவு ஐந்து கோடி 14 லட்சத்து 81 ஆயிரத்து 80 ரூபா எனக் கோரப்பட்டது.

படகு திருத்தத்தை கடற்படையினர் மேற்கொள்வர் எனத் தெரிவித்து 2024-02-20ஆம் திகதிய காசோலை மூலம் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கணக்கிலக்கத்தில் இருந்து உள்ளூராட்சி ஆணையாளரால் காசோலை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு திருத்தச் செலவிற்கான பணம் வழங்கப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்டபோதும் படகு சேவையில் இணைக்கப்படவில்லை எனக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கு மீனவருக்கு சீனாவிடமிருந்து மேலும் 150 கோடி ரூபா உதவிப் பொருள்கள்

(ந.லோகதயாளன்)

சீன அரசு வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு சுமார் 150 கோடி ரூபா பெறுமதியான

உதவிப் பொருள்கள் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அந்தப் பொருள்களுக்கு வரி விலக்களிக்கக் கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மீனவர்களிற்கு சீனக் குடியரசின் அடுத்த கட்ட உதவிப் பொருள்களாக வழங்கப்படவிருக்கும் 150 கோடி ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களின் பட்டியலே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் மிகவும் வறுமைப் பட்ட மீனவர்களில் 500 பேருக்கு பொருத்து வீட்டு வசதிகளும், 1,600 தொன் அரிசி உதவியும், 75 ஆயிரம் பேருக்கு வலைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவித்து அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் இந்த உதவிப் பொருள்களுக்கு உரிய வரி விலக்கு, ஏற்றி இறக்கல் வரித் தவிர்ப்பு என்பனவற்றிற்கான அனுமதி கோரியே அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# நெல் கொள்வனவில் ஏகபோக தர்பார் அரசால் கட்டுப்படுத்தவே முடியவில்லை

## விஜித ஹேரத் எம்.பி. விசனம் தெரிவிப்பு



"நெல்கொள்வனவுக்கு அரசாங்கம் தற்போது விலை நிர்ணயம் செய்தாலும் அந்த விலைக்கு கொள்வனவு செய்ய நாட்டில் எங்கும் நெல் இல்லை. இன்னும் ஏகபோக செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதனை கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாமல் போயிருக்கிறது."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேலை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நெல் அறுவடை காலத்தில் விவசாயிகளுக்கு முறையான விலை நிர்ணயம் செய்து அதனை பெற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. ஆனால் நாட்டில் அதிகமான மாவட்டங்களில் நெல் அறுவடை இடம்பெற்று 2மாதங்கள் கடந்துள்ள நிலையிலேயே தற்போது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பில் நாங்கள் கதைத்துக்கொண்டிருக்கிறோம்.

தற்போது விலை நிர்ணயம் செய்தாலும் அந்த விலைக்கு நெல் பெற்றுக்கொள்ள நாட்டில் எங்கும் நெல் இல்லை. பாரிய நெல் ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்துள்ளனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரமே தற்போது நெல் அறுவடை இடம்பெறுகிறது.

விவசாயிகளிடமிருந்து நாடு ஒரு கிலோ 105 ரூபா, சம்பா 115 ரூபா என பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் பெப்ரவரி ஆரம்பத்தில் இருந்து 85, 90 ரூபாவுக்கே நெல் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தற்போது விலை நிர்ணயம் செய்தாலும் கொள்வனவு செய்ய நாட்டில் நெல் இல்லை.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்ய கடன் வழங்குவதாக தெரிவித்தாலும் அது இன்னும் இடம்பெறவில்லை. அதனால் அவர்களுக்கு நெல் கொள்வனவு செய்ய முடியாமல் போயுள்ளது. இன்னும் ஏகபோக செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாமல் போயிருக்கிறது.

நெல்லைக் கொள்வனவு செய்ய முறையான விலை நிர்ணயம் செய்து விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள அரசாங்க நெல் கொள்வனவு சபைக்கு முடியாமல் போயிருக்கிறது. நெல் கொள்வனவு செய்ய தங்களிடம் பணம் இல்லை என சபைதெரிவித்திருக்கிறது.

நெல் உற்பத்திக்கான செலவுக்கு ஏற்ற வருமானம் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. அதனால் நெல் விவசாயிகள் விவசாயம் செய்வதில் இருந்து விலகி வருகின்றனர்.

மேலும் கௌப்பி, பயறு, உளுந்து இறக்குமதி செய்வதைத் தடை செய்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் புறக்கோட்டையில் இன்னும் மொத்த விலைக்கு இந்த பொருத்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியாமல் போயிருக்கிறது.

அரசாங்கத்தின் இயலாமையே இதற்கு காரணமாகும். விவசாயிகளை பலப்படுத்த எந்த வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. விவசாய பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தை ஊக்குவிப்பதாக இருந்தால் அரசாங்கம் விவசாய பொருள்களுக்கான வரியை இல்லாமலாக்க வேண்டும்"– என்றார்.

# நெடுந்தீவு மண்ணில் நெடுவூர்த்திருவிழா!

## ஓகஸ்ட் 4 முதல் 10 வரை




உலகம் முழுவதும் பரந்து வாழும் நெடுந்தீவின் உறவுகளை ஒன்றிணைத்து பிரதேச அபிவிருத்தியினையும் உள்ளூரில் வாழும் உறவுகளினதும் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் நெடுந்தீவில் எதிர்வரும் ஓகஸ்ட் 4 முதல் ஓகஸ்ட் 10 வரை நெடுவூர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நெடுவூர்த் திருவிழாவின் ஏற்பாட்டாளரும் நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான கிருபாகரன் தர்மலிங்கம் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

கடந்து போன இனப்போரினாலும் பொருளியல் போரினாலும் சிதறுண்டு போனோரெல்லாம் உலகின் பல பாகங்களிலும் வெளி மாவட்டங்களிலும் பரந்து வாழும் இச்சூழலில் எமது தாய்மண் உறவுகள் ஒன்றிணைந்து கடந்த கால வாழ்வியலை மகிழ்வோடு மீட்டுப் பார்க்கும் அழகிய தருணமாக இந்நெடுவூர்த் திருவிழா அமையும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்விழாவில் பல்துறைசார்ந்த நிகழ்வுகளை உறவுகளின் பங்களிப்புடன் நடத்துவதற்கு நாம் எண்ணியுள்ளோம்.

இதன்மூலம் நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தியினையும் உள்ளூரில் வாழும் உறவுகளினதும் வாழ்வியலை மேம்படுத்துவதே நோக்கம் – என்றார்.




# தாவரத் தடுப்புக் காப்பு நிலையம் யாழில் திறந்து வைக்கப்பட்டது!

விவசாயப் பொருள்களை வெளிநாட்டிற்கு அனுப்பு வதற்கு அனுமதியளிக்கும் தாவரத் தடுப்புக் காப்பு நிலையம் யாழில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மரக்கறி, பழங்கள், பூ விதை வகைகள், நுண்ணங்கிகள், பூ அலங்காரங்கள் போன்ற தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் இந்நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கிய மேற்படி நிலையம் வடபகுதி மக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் தலைமைத் தபாலகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ளமை குளிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுனர், வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் தபாலக அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொண்ட ஓர் வைத்திய அலகு கட்டப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவினால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

அந்தக் கட்டமைப்பை அமைப்பதற்கு மூலமானவர்களாக – முக்கிய காரணகர்த் தாக்களாக – இருந்த மூவர் புறக் கணிக்கப்பட்டே இந்த நிகழ்வு பெரும் படாடோபமாக நடந்தேறியிருக்கின்றது.

வடக்கு மாகாண சபை சாதித்த சாத னையாக இந்தத் திட்டத்தைத் திடமாகக் கூற முடியும். அதுவும் மாகாண சுகாதார அமைச்சராக இருந்த – தமிழ் அரசுக் கட்சி யின் தற்போதைய பதில் செயலாளரும் மருத்துவருமான – ப.சத்தியலிங்கத்தின் தனித்துவ முயற்சியினால்தான் இந்தப் பாரிய திட்டம் சாத்தியமாயிற்று. இதனை அவரின் தனி மனித சாதனையாக அடை யாளப்படுத்துவதில் தப்பேதுமில்லை.

அவரே தமது வெளிநாட்டு விஜயத்தின் போது இத்திட்டம் உட்பட வடக்கில் பல மருத்துவ அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவும் கரங்களை வளைத்துப் பிடித்துக் கொண்டு வந்தார்.

அந்தச் சாதனைக்கு வேறு எவரும் உரிமை கோரவே முடியாது.

மாகாண முதல்வர் போட்ட முட்டுக்கட் டைகளைக் கூட நெட்டித் தள்ளித்தான் இந்தத் திட்டத்தை உருக் கொடுத்து நகர்த் தினார் அதன் பிதாமகர் மருத்துவர் சத்திய லிங்கம்.

அவர் தயாரித்த திட்டத்தை அப்போது மத்திய சுகாதார அமைச்சராக இருந்த மருத்துவர் ராஜித சேனாரத்ன அங்கீக ரித்து, தானும் சேர்ந்து செயலாற்றி, அதனை அமைச்சரவைக்குக் கொண்டு சென்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் தலைமையிலான அமைச்சர வையில் அதனை அங்கீகரிக்கவும் வழி செய்தார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அப்போது அரசுடன் இருந்த தமது நெருக்கத்தைப் பயன்ப டுத்தி, அப்போதைய பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரி யின் ஒப்புதலை பெற்றுக்கொடுத்தார்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட திட்டத்தின் வெற்றி நிகழ்வில் இந்த மூவருக்குமே – திட்டத்தின் பிதாமகர் மருத்துவர் சத்தியலிங்கம், மருத்துவர் ராஜித சேனா ரத்ன, சுமந்திரன் மூவருக்குமே – உரிய இடமளிக்கப்படவில்லை.

எந்தவொரு பங்களிப்புமே செய்யாத அனைவரும் வந்து 'உடையாரின் திருவி ழாவில் சடையார் வானம் விட்ட கதையாக' நேற்றுப் படம் காட்டிச் சென்றனர்.

இதிலே திட்டத்தின் பெரும் முயற்சியாள ரான மருத்துவர் ப.சத்தியலிங்கத்தை மேடையில் அமர்த்துவதா, நன்றி தெரிவிப் பதா, அழைப்பதா என அனைத்திலும் சர்ச்சை ஏற்பட்டு, அரச கட்டளைக்கு தலையாட்டிப் பொம்மைகளாக இயங்கும் நிர்வாகிகள், வெறுமனே ஓர் அழைப்பைப் பெயருக்கு அவருக்குக் கொடுத்து, கூட்டத் தோடு கூட்டமாக அவரை இருத்தி, தங்களுக்கு இழுக்குத் தேடிக் கொண்ட னர்.

என்றாலும் நெஞ்சம் குறுகுறுத்த வர்கள் அனைவரும், நிகழ்வு முடிந்ததும், துக்கம் விசாரிப்பவர்கள் போன்று 'உங்கள் கடும் முயற்சி கண் முன்னால் காட்சியளிக் கின்றபோதும், வாய் விட்டுப் பெயர் சொல்லிப் பேச முடியவில்லை, மன்னித்து விடுங்கள்' என மருத்துவர் ப.சத்தியலிங் கத்திடம் புலம்பி, தத்தமது மனசாட்சிக்குச் சமாதானம் கூறிச் சென்றனர்.

மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஒழுங்கு படுத்திய இந்த வெளிநாட்டு உதவித் திட் டத்தின் தொடர்ச்சியாக சாவகச்சேரி, மாங் குளம் விபத்துப் பிரிவுகளும் தொடர்ந்து அமைக்கப்படுகின்றன. அவை திறக்கப் படும்போது யாரின் ஆட்சியோ, அப்போது படம் காட்டி சாதனை சான்றிதழைச் சுத் திக் கொண்டு போகப் போகிறவர்கள் யாரோ...? ஆண்டவனுக்குத்தான் வெளிச் சம்...!

## பருத்தித்துறை ஆதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நெதர்லாந்து அரசின் மென்கடன் திட் டத்தின் கீழ் இந்தப் புதிய கட்டடம் நிர் மாணிக்கப்பட்டுள்ளது. 400 கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

புதிய கட்டடத் தொகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக் கூடங்கள், குருதி சுத்தி கரிப்புப் பிரிவு, கதிரியக்கப் பிரிவு, சிறுவர் களுக்கான விசேட சிகிச்சைப் பிரிவு, குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரிவு மற்றும் நோயாளர் விடுதி ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணப் படும் நான்கு ஆதார வைத்தியசாலைகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யும் ஒன்றாகும். இது "ஏ" தர ஆதார வைத்தி யசாலையாகக் காணப்படுகின்றது.

ஆதார வைத்தியசாலைகளின் வசதி கள் குறைவாகக் காணப்படுவதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையை அதிகளவில் நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் ஊடாக பலர் நன்மையடையவுள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசா லையின்புதியகட்டடத்தைத்திறந்துவைத்த தன் பின்னர் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவி னர் சிகிச்சைப் பிரிவுகளைச் சென்று பார் வையிட்டனர்.

## இனப்பிரச்சினைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

"மகாசக்தி ஆகிய நீங்கள் இந்தப் பிரபஞ்சத்தை வெற்றி கொண்ட பெண் களாக மாறியுள்ளீர்கள். 2009 இற்கு முன் னர் ஆயுதப் போராட்டம் நடந்தபோது ஒரு பெருந்தலைவனுக்குக் கீழ் மிகப் பெரும் விடுதலைப் போரிலே ஒவ் வொரு பெண்ணினதும் தனித்துவமான ஆளுமை எல்லாத் துறைகளிலும் சம பங்காளிகளாக வந்துள்ளதை வரலாறு நிரூபித்திருக்கின்றது.

போருக்குப் பின்னரான காலப்பகுதி யில் போதை வஸ்து என்ற அரக்கன் இந்தப் பெண்கள் மீதான வன்முறை கள் மற்றும் அடக்குமுறைகளைக் கட்ட விழ்த்து விட்டிருக்கின்றது.

இவ்வாறான சீரழிவுகளுக்குள் தலை நிமிர்ந்து வாழுகின்ற இந்தக் காலகட் டத்தில் பெண்கள் மீதான மறைமுக மான சில வன்முறைகள் இப்போதும் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றத்தில் கூட பெண்கள் மீதான வன்முறைகள் இடம்பெற்று இருக் கின்றன என்பது ஊடகங்கள் ஊடாகச் செய்திகளாக வெளியாகி இருக்கின்றன.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் பேசப்படுகின்றது. ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளர் கூட இந்த மண்டபத்தில் ஒரு கூட்டத்தை நடத்திச் சென்றிருக்கின்றார். நீண்ட நெடுங்காலமாகக் கடந்த எட்டு சகாப்தங்களுக்கு மேலாக உறுதி தளராது – தனது கொள்கை தளராது இனத்தினு டைய அடிப்படைக் கொள்கைகளை அடி நாதமாகக் கொண்டு தமிழினம் பயணித்து வருகின்றது.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிடுகின்றவர்கள் யாராக இருந்தா லும் இனப்பிச்சனைக்கான ஒரு தீர்வை முன்வையுங்கள். நாங்கள் அது பற்றி பரிசீலிப்போம். தமிழர்கள் பொது வேட் பாளர் பற்றிய சிந்தனையையும் கொண் டுள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வை எட்டுவதற்காகத் தமிழ் வாக்காளர்கள் ஒன்றுதிரண்டு ஒரு தமிழ் பொது வேட்பா ளரை தீர்மானிக்க முனைந்தால் தென்பகு தியில் இருந்து எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் வெல்ல முடியாத மிகப் பெரும் சங்கடத்தைக் கொடுக்கும். அது பற்றி கூட தமிழர் தரப்பு மிக நுணுக்கமாக ஆராய்கின்றது." – என்றார்.

## வடக்கு தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கூறியதாவது:–

"தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அலை இருக்கின்றது எனக் கூறப்பட்டாலும் தற்போதுள்ள வாக்கு வங்கியைவிட சற்று கூடுதல் வாக்கு அக்கட்சிக்குக் கிடைக்கும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி யின் வாக்கு வங்கி 10 விகிதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

வடக்கிலும் எமக்கே ஆதரவு உள்ளது. இனவாதக் கட்சிகளுக்கு அம்மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். எமது அணியில் இனவாதிகள் இல்லை. சஜித் இனவா தம் அற்ற தலைவர். அனைத்து இனத்த வர்களும் அங்கம் வகிக்கக் கூடிய கட்சி எமது கட்சியாகும்.

அதேவேளை, அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட்டணியாக எதிர் கொள்வதற்குச் செயற்குழுக் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது." – என் றார்.

## சிகிச்சை பெற்று வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், தலையாழி பகுதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் தினேஷ் என்ற 44 வயதானவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

மேற்படி நபர் மூச்செடுக்கச் சிரமம் என்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் வேறொரு விடுதிக்கு மாற்றுவ தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டபோதே நேற்று மாலை வைத்தியசாலையின் பின்பக்க நுழைவாயில் ஊடாகத் திடீ ரென வெளியேறி சிறிது நேரத்தில் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அதிகளவிலான மதுபான பாவனை காரணமாக நுரையீரல் பாதிக்கப்பட்ட மேற்படி நபரின் உடலில் ஏற்றப்பட்ட கனூலா கழற்றப்பட்ட நிலையில் இரத் தக் கசிவு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 2 மில்லியன் மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய ஜனாதிபதி பணிப்பு







காணி உரிமை வழங்கும் "உறுமய தேசிய வேலைத்திட்டத்தை" ஜூன் மாதமளவில் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்குத் தாம் பணிப்புரை விடுத்திருக்கிறார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எந்த இனத்தவராக இருந்தாலும் சட்டரீதியான காணி உரிமை தமக்கு கிடைக்க வேண்டும் என்பதே அனைத்து பிரஜைகளினதும் கனவாகும் என்ற வகையில், அவ்வாறான உரிமை சகலருக்கும் கிடைக்க வேண்டும் என்பதையே தான் விரும்புகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - ஒட்டகப்புலம் பகுதியில் நேற்று நடைபெற்ற "உறுமய" காணி உரிமம் வழங்கும் வேலைத்திட்டத்தின் போதே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2 மில்லியன் மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தின் 408 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடையாள ரீதியாக காணி உறுதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விதைப்பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனையடுத்து காணி உரிமை பெற்றவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை நினைவாக மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார்.

காணி உரிமை வழங்கு வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

"அரச காலத்தில் காணி உரிமை மக்களிடமே காணப்பட்டது. பிரித்தானியர் காலத்தில் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் காணிகள் அபகரிக்கப்பட்டன. அதன்படி நாட்டின் 80 வீத காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமானது. அந்த காணிகளுக்கான அனுமதிகளை மக்களுக்கு வழங்கியிருந்தாலும் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மக்களிடமிருந்து பெறப்பட்ட காணிகளின் உறுதிகளை மக்களிடம் மீளக் கையளிக்க எதிர்பார்க்கிறோம். அதனால் அனைவருக்கும் காணி உரிமம் வழங்க தீர்மானித்தோம்.

எந்த இனத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் காணி உரிமை கிடைக்க வேண்டும். அதற்காக உறுமய வேலைத்திட்டம் அண்மையில் தம்புளையில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஒரு சிலருக்கு மாத்திரம் அதன் பலன் கிடைத்திருந்தாலும் ஜூன் மாதமளவில் அந்த வேலைத்திட்டத்தினை முழுமையாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

மேலும் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளோம். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகத்தை தெரிவு செய்துள்ளோம். இது யாழ்ப்பாணத்தில் கோப்பாயில் செய்யப்படுகிறது. இதன் மூலம், இந்த மாகாணம் நவீன விவசாயத்தைப் பெறுகிறது. அதே சமயம் வருமானமும் அதிகரிக்கிறது.

யுத்தத்தின் பின்னர் பெருமளவிலான காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் எடுக்கப்பட வேண்டியிருந்தது. இதுவரை 31 ஆயிரம் ஏக்கர் அரச காணிகளையும் , 24 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகளையும் அரசாங்கம் விடுவித்துள்ளது. மொத்தம் 63 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த 1800 ஏக்கர் அரச காணி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 856 ஏக்கர் தனியார் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2600 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

2600 ஏக்கர் அரச காணிகளையும் 68 ஏக்கர் தனியார் காணிகளையும் விமானப்படை விடுவித்துள்ளது. மொத்தம் 2600 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சில நாள்களுக்கு முன்னர், 101 ஏக்கர் காணி மக்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று 234 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பல கிராமங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு வனப் பாதுகாப்புத் துறையினர் வனப் பாது காப்புப் பகுதிகள் என பெயரிட்டிருந்தனர். 1985 வரைபடத்தின்படி செயற்பாடுகளைத் தொடர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

முன்னதாக இந்த இடத்தின் காணி உரிமையாளர்களும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து பலாலி ஸ்மார்ட் விவசாய வேலைத்திட்டத்தை Palali Smart Agriculture ஆரம்பித்து வைத்தனர்.

இந்த காணிகள் அனைத்தும் நவீன விவசாயத் திட்டத்தில் மீண்டும் உரிமையாளர்களால் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளோம். இதை அவர்களால் தனியாக செய்ய முடியாது என்பதால், அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்க முப்படைகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.மேலும், அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக உயர்தர நிறுவனங்களின் பங்களிப்பும் வழங்கப்படுகிறது. மேலும், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் ஆதரவும் பெறப்படுகிறது.

இந்த காணிகளை ஒதுக்குவதற்கும் அதே நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த பண்ணை இந்த இடத்தில் பராமரிக்கப்பட வேண்டும். மேலும், முழு இலங்கைக்கும் முன்மாதிரி பண்ணையாக அது இருக்க வேண்டும்.

அத்துடன், வடக்கில் புதிய வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றோம். யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளை நாம் தற்போது தீர்த்து வருகின்றோம். மேலும் நாங்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆரம்பித்தோம். அதனுடன் நாம் மட்டுப்படுத்தவில்லை. மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். மேலும் அவர்களின் வருமான மூலங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, இந்த மாகாணத்தில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கி வருகிறோம்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை விவசாயத்தை ஊக்குவிக்கவும், இந்த மாகாணத்தில் உள்ள பாரிய சூரிய சக்தி மற்றும் காற்றாலை சக்தியை பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். அதற்கு இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. இதன் மூலம் சுற்றுலாத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழிலையும் ஊக்குவிக்க முடிகிறது. மேலும், முதலீட்டு வலயங்களுக்கும் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 05, 10 வருடங்களில் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வடக்கிற்கு வலுவான பொருளாதாரத்தை வழங்குவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். இலங்கையின் வடக்கை ஒரு பெரிய பொருளாதாரமாக மாற்ற நான் அனைவரையும் அழைக்கிறேன்." – என்றார்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டத் திருத்தத்தால் சர்ச்சை

பாலியல் விடயங்களை ஒட்டிய தண்டனைச் சட்டக் கோவை ஒழுங்குகளை மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பி இருக்கின்றது.

தண்டனைச் சட்டக் கோவையின் 363 மற்றும் 364ஆம் சரத்தின் 19 ஆம் அத்தியாயத்தை திருத்துவது தொடர்பாக நீதி அமைச்சரினால் கடந்த 13 ஆம் திகதியிடப்பட்ட அறிவித்தல் மூலம் சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கே இப்போது கடும் எதிர்ப்பு கிளம்பி இருக்கின்றது.

1995 ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கு அமைய, 16 வயதுக்குட்பட்ட பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில் உடலுறவு கொண்டாலும், அது அவர் மீதான பாலியல் வல்லுறவாகக் கருதப்படும்.

அதாவது 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியுடனான உடலுறவு அச்சிறுமியின் இணக்கத்துடன் அல்லது இணக்கமின்றி நடந்தாலும் அது பாலியல் வல்லுறவாகக் கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும்.

நீதி அமைச்சரால் தற்போது தண்டனைச் சட்டக் கோவைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் மூலம் அந்த வயதெல்லையை 14 வயதாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதாவது 14 வயதுக்கு மேற்பட்ட பெண்ணுடன் அவரது இணக்கத்துடன் மேற்கொள்ளப்படும் உடலுறவை பாலியல் வல்லுறவாகக் கருதமுடியாது என்பதுதான் அந்தச் சட்டத் திருத்தம்.

தவிரவும், இது போன்ற வேறு சில திருத்தங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

இதே விடயத்தை ஒட்டி, ஆண் குற்றவாளிகளின் வயது 22க்கு குறைவாக இருந்தால் தண்டனையை தளர்த்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டத்தின் பிரிவு 363 ஆண் மற்றும் பெண் பலாத்காரத்தை ஒன்றாக வைப்பதற்குப் பதிலாக, பெண் பலாத்காரத்திற்கான தனிச்சட்டங்களும் மற்றும் ஆண்களுக்கு தனித்தனி சட்டங்கள், தனித் திருத்தங்கள் மூலம் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் திருத்தச் சட்டங்களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் உரையாற்றுகையில் இவ்வாறு அரசைக் கோரியிருக்கின்றார்.

பாலியல் செயற்பாட்டிற்காக சிறுமிகளின் வயதை 16 இலிருந்து 14 ஆகக் குறைக்கும் சட்டத் திருத்தத்தை உடன் நிறுத்துமாறு நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றப் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் என்ற வகையில் தண்டனைச் சட்டக் கோவையின் 364 ஆம் பிரிவுக்கான உத்தேச திருத்தம் தொடர்பில் தனது கடுமையான கவலையை வெளியிடுகின்றார் என்று குறிப்பிட்டுள்ள ஒன்றியத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தண்டனைச் சட்டக் கோவையின் 364ஆம் பிரிவைத் திருத்துவதற்கான உத்தேச சட்டமூலத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்நாட்டின் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குமாறும் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக நீதியை உறுதிப்படுத்துமாறும் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் சார்பில் தாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, ஒரு புதிய பிரச்சினையைக் கிளப்பி விட்டிருக்கிறார் நீதி அமைச்சர்.

தேசிய மட்டத்தில் பலத்த சர்ச்சைகளை - வாதப்பிரதிவாதங்களை - இந்த விவகாரம் ஏற்படுத்தப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம்.

உள்நாட்டில் ஊடகங்களிலும் இந்த வாதப்பிரதிவாதங்கள் கொடி கட்டிப் பறக்கும் என எதிர்பார்க்கலாம்.



# ரஷ்யாவில் அரங்கமொன்றில் மர்ம நபர்களால் தாக்குதல்

## 40 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவின் – மொஸ்கோவில் மர்ம நபர்களால் பயங்கரவாத தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மொஸ்கோவில் உள்ள Crocus City என்ற அரங்கத்தில் (இசை நிகழ்ச்சிகள் நடாத்தும் அரங்கம்) இந்த பயங்கரவாத தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த தாக்குதலில் சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கரவாதிகள் குறித்த அரங்குக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்துவது போன்ற காணொளிகள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.









# இளவரசி கேட்டுக்கு புற்றுநோய் பாதிப்பு





பிரிட்டனின் – வேல்ஸ் இளவரசி கேட்டுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அவருக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்த பிறகு எடுக்கப்பட்ட சோதனைகளில் புற்றுநோய் இருப்பது தெரியவந்ததையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் ஒரு பரிசோதனை செய்துள்ளார்.

42 வயதான கேட் பிரித்தானிய இளவரசர் வில்லியமின் மனைவியாவார்.

# பா.ஜ.க. இயக்கத்தில் இ.பி.எஸ். நாடகம்!

## திருச்சி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரை





"தேர்தல் என்பதால், பிரதமர் இப்போது இந்தியாவிலேயே இருக்கிறார். எனவேதான், அடிக்கடி தமிழகத்துக்கு வருகி றார். இல்லையென்றால் பெரும்பாலும் வெளிநாட்டில்தான் இருப்பார்."

– இவ்வாறு திருச்சியில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத் தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார்.

மக்களவைத் தேர்தலையொட்டி தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் நேற்று பிரச்சாரத்தை தொடங்கினார். திருச்சி அருகே சிறு கனூரில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,


"பாசிச பா.ஜ.கவை வீழ்த்தி, இண்டியா கூட்டணியின் ஆட்சியை மத்தியில் ஏற்படுத்துவதற்காக நடப்பதுதான், இந்த நாடாளுமன்றத் தேர்தல்.

தேர்தல் என்பதால் பிரதமர், இப்போது இந்தியாவில் இருக்கிறார் அதனால் அடிக்கடி தமிழகத்துக்கு வருகிறார். இல்லை என்றால், பெரும்பாலும் வெளிநாட்டில்தான் இருப் பார். சமீபத்தில் சேலத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, தமிழகத்தில் அவருக்கு செல்வாக்கு அதிகமாகிவிட்டதால், திமுகவினருக்குத் தூக்கம் வரவில்லை.என்று பேசியிருக்கி றார். உண்மையில், தன்னோட ஆட்சி முடியபோகிறது என்று, பிரதமர் மோடிக்குத்தான் தூக்கம் வரவில்லை. அவருக்கு ஏற்பட்டிருக்கும் தோல்வி பயம், அவரின் முகத்திலும், கண்ணிலும் நன்றாகத் தெரிகிறது!

சரி, தமிழகத்துக்கு இத்தனை முறை வந்தாரே, அவரிடம் நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். அதுக்கு ஒருமுறை யாவது பதில் சொன்னாரா? வாரா வாரம் வந்தாலும் அவர் பதில் சொல்லவில்லை. இனி வந்தாலும், சொல்லவும் முடியாது. பத்தாண்டு காலம் ஆட்சி செய்த ஒரு பிரதமரால், தமிழகத்துக்குச் செய்த சிறப்புத் திட்டம் என்று ஒன்றே ஒன்றைக் கூட சொல்ல முடியுமா? இவர் நம்மை விமர்சிக்கிறார். இப்போது நான் சொல்கிறேன், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி யில் மூன்று ஆண்டுகளாக, மக்களாகிய உங்களுக்காகச் செய்த சாதனைகளின் பட்டியல் சொல்லவா? சொன்னால் இன்றைக்கு ஒரு நாள் போதாது.

தமிழகத்தில் சொல்வதற்கென்று, எதுவுமே இல்லாத ஆட்சியை நடத்தியவர்தான் பிரதமர் நரேந்திர மோடி. அவரால் சாதனைகளை சொல்ல முடியவில்லை. மேடைக்கு மேடை என்ன சொல்கிறார், பத்தாண்டு நான் ஊழலற்ற அரசாங்கத்தை நடத்தினேன் என்று சொல்கிறார். பாஜக ஆட்சியில் நடந்த ஊழல்கள் பற்றி, நாம் மட்டுமல்ல நாடு முழுவதும் கேள்வி கேட்டாலும் அவரால் பதில் சொல்ல முடியவில்லை." – என்றார் .

# நாம் தமிழர் கட்சிக்கு 'மைக்' சின்னம் தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்தது



இந்திய நாடாளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கி யுள்ளது.

மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி தொடங்கி ஜுன் முதலாம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது.

பதிவான வாக்குகள் ஜுன் 4 ஆம் திகதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

ஏப்ரல் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கவுள்ளது. தேர்தலுக்கான தொகுதி பங்கீடு வேட்பாளர் அறிவிப்பு, பிரச்சாரம் என தேர்தல் பணிகளில் கட்சிகள் ஆர்வம் காட்டி வரும் நிலையில் நாம் தமிழர் கட்சி மட்டும் சின்னம் தொடர்பான சிக்கலில் சிக்கியிருந்தது.

இந்த நிலையில், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு மைக் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தல்களில் நாம் தமிழர் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட கரும்பு விவசாயி சின்னத்தை கர்நாடகாவைச் சேர்ந்த பார திய பிரஜா ஐக்கியதா கட்சி இந்திய தேர்தல் ஆணையத் தில் விண்ணப்பித்து பெற்றுக் கொண்டதால் நாம் தமிழர் கட்சிக்கான சின்னம் பறிபோனது.

இதனை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த நீதிமன்றம் வேறொரு சின்னத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தியது.

இந்த நிலையில் சீமான் தலைமையிலான நாம் தமி ழர் கட்சிக்கு இந்திய தேர்தல் ஆணையம் மைக் சின் னத்தை ஒதுக்கி உள்ளது. இருப்பினும் நாம் தமிழர் கட்சி வேறு சின்னத்தை கேட்பதாக தகவல்கள் வெளியாகி உள் ளன.




**உரலார் கேள்வி :-** ஆனந்தசங்கரி தனது கட்சியை விற்று விட்டாராமே? கேள்விப் பட்டீர்களா?

**உலக்கையார் பதில் :-** அவருமாமாமாமா?

**சல்லடையார் சலிப்பு :-** வாரிதியார் வடிவேலு ஸ்டைலப் பிடிக்கிறார் போல.



◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**உரலார் கேள்வி :-** கோத்தபாய புத்தகம் வெளியிட்டிருப்பது பற்றித் தனக்கு ஏதும் தெரியாதென்று, நேர்காணல் ஒன்றில் பஸில் சொல்லியிருப்பது பற்றிக் கேள்விப்பட்டீர்களா?

**உலக்கையார் பதில் :-** முன்பு சகோதரர்களாய் அணைத்துக் கொண்டு ஆட்சிக்குள் புகுந்தார்கள். இப்போது அடித்துக் கொண்டு ஆட்சிக்குள்



நுழைய முயல்கிறார்கள் போல. இது ஊரை ஏமாற்றச் சகோதரர்கள் கண்டுபிடித்திருக்கும் புது வழி என்றே நினைக்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு:-** 'அண்ணன் என்னடா? தம்பி என்னடா? அவசரமான உலகத்திலே'

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**உரலார் கேள்வி :-** தமிழ் நாட்டில் நடக்கும் மோடியின் சூறாவளிச் சுற்றுப் பயணம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**உலக்கையார் பதில் :-** தமிழ் நாட்டில் பல காலமாய் வேரூன்றி நின்ற பல விருட்சங்களை, அந்தச் சூறாவளி அசைத்து வருவதாகச் சொல்கிறார்கள். தேர்தல் முடிவுகள்தான் உண்மையை உரைக்கும்.

**சல்லடையார் சலிப்பு:-** லேடியில மயங்காத வாரிதியார் மோடியில மயங்குகிறார் போல....... இது எப்படி இருக்கு? ஹீ.. ஹீ..ஹீ..!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**உரலார் கேள்வி :-** 'வீடு' கோடு வரை போனது பற்றி?

**உலக்கையார் பதில் :-** கேடுதான்!

**சல்லடையார் சலிப்பு:-** வாரிதியார் வாருறாரோ?...எங்களுக்கும் எதுகை வருமாக்கும்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**உரலார் கேள்வி :-** வெடுக்குநாறி மலைச் சம்பவம் பற்றி?

**உலக்கையார் பதில் :-** மொழி முடிந்து சமயம்



தொடங்கியிருக்கிறது. கண்டிக்கத்தக்க அரசின் செயற்பாடு! பிரச்சினைகளை உருவாக்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை நாட்டை அழித்தது போதாது என்று நினைக்கிறார்கள் போல.. கற்பூரம் கொளுத்தி னால் காடு பற்றி எரிந்து விடுமாம். நாடு பற்றி எரிவது பற்றிக் கவலைப்படாதவர்கள், காடு பற்றி எரிவது பற்றிக் கவலைப்படுகிறார்கள். இது வண்டில் கப்பலில் ஏறும் நேரம்! கப்பல் வண்டியில் ஏறும் நேரமும் வரலாம் என்பதை இவர்கள் மறந்து விடக் கூடாது.

**சல்லடையார் சலிப்பு :- அவனில தொட்டு, இவனில தொட்டு, இப்ப சிவனில தொட வந்திட்டாங்கள் போல. 'பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே'!**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**உரலார் கேள்வி :- முடிவாகச் சொல்லுங்கள் சுமந்திரனும், சிறீதரனும் ஒன்று சேர்ந்து பதவிப் பிரச்சினையை முடிப்பார்களா? இல்லையா?**

**உலக்கையார் பதில் :-** ஒன்று உணர்வு, மற்றை யது அறிவு. உணர்வில்லாத அறிவாலும் பயனில்லை. அறிவில்லாத உணர்வாலும் பயனில்லை. தமிழினத்தின் சாபக்கேடு இது. அறிவும், உணர்வும் ஒன்று சேர்ந்தால் தமிழினம்



தலை நிமிரும். சேருமா? சூழ இருப்பவர்கள் சேரவிடுவார்களா? காலந்தான் பதில் சொல்ல வேண்டும். காத்திருப்போம்.

**சல்லடையார் சலிப்பு:- வாரிதியாரும் தடிய ஓட்டித்தான் பார்க்கிறார். மாடுகள் தான் எழும்பிற பாடாய் இல்லை.**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**உரலார் கேள்வி :- வரப்போகிற தேர்தலில் தமிழ்க்கட்சிகளில் எந்தக் கட்சிக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கப் போகிறது?**

**உலக்கையார் பதில் :-** சூழ்நிலைகள் மாறிக் கொண்டே இருப்பதால், ஊகத்தால் அன்றி உறுதிபட இக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது என்று நினைக்கிறேன். ஆனாலும் நீங்கள் கேட்டபடியால் என் ஊகத்தை இங்கு பதிவு செய்கிறேன்.

■ சென்ற தேர்தலின்போது கூட்டமைப்புக் குள் முன்னாள் முதலமைச்சர் ஏற்படுத்தி யிருந்த குழப்பங்களால், அக்கட்சி தனக் கென வைத்திருந்த மக்கள் ஆதரவினை ஓரளவு இழந்து போயிற்று. அக் கட்சியால் இழக்கப்பட்ட மக்கள் ஆதரவினை, கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அவர்களைச் சார்ந்த 'தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி' கட்சியும், முன்னாள் முதல மைச்சரால் புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி'க் கட்சியும் தமக்குள் பகிர்ந்து கொண்டு அப்போது சில வெற்றிகளைத் தேடிக்கொண்டன.

■ ஆனால் இன்றைய நிலையில், அவ்விரு கட்சிகளுக்கும் அப்போது இருந்த ஆதரவு வற்றிப் போய்விட்டதாகவே தோன்றுகிறது.

■ கஜேந்திரகுமாரின் 'தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி' தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் காக அவ்வப்போது வெறுமனே கூக்குரல் இடுவ தோடு ஓய்ந்து போகிறது. எந்தப் பிரச்சினைக்கும் நடைமுறைச் சாத்தியமான தீர்வினை அவர்கள் முன்வைப்பதே இல்லை. குறித்த சில ஆதரவா ளர்களை மட்டும் அழைத்துச்சென்று, பொலி ஸாரையும், இராணுவத்தினரையும் எதிர்த்து அவர்கள் நடாத்தும் போராட்டங்கள், அவர்க ளின் விளம்பரங்களுக்கு மட்டுமே பயன்படு கின்றன. அவர்களின் அப் போராட்டங்களில் கூடும் குறைந்த கூட்டம், அவர்கள் வைத்திருக்கும் மிகக் குறைவான ஆதரவாளர்களின் கணக்கைப் பகிரங்கப்படுத்துகிறது.

அவர்கள் 'துணைவலி' பற்றிக் கவலைப்படா மல், தமது அறிக்கைகளால் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பகை தேடிக் கொண்டிருக் கிறார்கள். அதனால் உலக சக்திகள் ஏதும் அவர் களின் வெற்றிக்குத் துணை செய்யப் போவ தில்லை என்பது நிச்சயம்.

வடக்குக்கு வெளியே போராட்டம் நடத்தப் போன அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், சிங்களப் பெண்களிடம் அடிவாங்கி ஓடியமைக்கு இன்றுவரை எந்த எதிர்வினையும் ஆற்ற முடியாமல் நிற்பது அவர்களின் வலி மையைக் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.

அது தவிரவும் சென்ற தேர்தலில் இளைஞர் பட்டாளம் ஒன்றை இக் கட்சிக்காகச் சேர்த்துத் தந்த மணிவண்ணன் உடனான மனமுறிவும், இக் கட்சியின் பலத்தைப் பாதிக்கவே செய்திருக் கிறது. இக் கட்சியினர் தமிழ் மக்களுடன் பேணும் உறவு நிலை மிகவும் பலவீனமானது. தமிழ் மக்களின் சங்கமங்களில் இக் கட்சியின் தலை வர்களைப் பெரும்பாலும் காண முடிவதில்லை. இவையெல்லாம் இக் கட்சியின் பலவீனங்கள்.

இக் கட்சியை வழி நடத்துகின்ற கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்கள் நாடாளு மன்றத்தில், அழகான ஆங்கிலத்தில் ஆற்று கிற வாதங்கள் மட்டும்தான் இப்போதைக்கு அவர்களது கட்சிக்கு இருக்கின்ற ஒரே பலம் என்று சொல்லலாம். அதனால் வரும் தேர்த லில், இக் கட்சி பெரும் சலசலப்பை ஏற்படுத்தப் போவதில்லை என்றே தோன்றுகிறது.

■ சித்தார்த்தனின் 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்', செல்வம் அடைக்கலநாதனின் 'தமிழீழ விடுதலை இயக்கம்', சுரேஷ் பிரேமச்சந்திர னின் 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' என்பவை முன்பு கூட்டமைப்போடு கூடியிருந்த மையால் பலம் பெற்ற கட்சிகள்.

இவர்களை உப்புக்கு உவமானமாகச் சொல்லலாம். உப்பு கறிகளில் சேர்ந்து சுவை தருமே தவிர, தனித்து அதனை உண்ண முடியாது. அப்படித்தான் இக் கட்சிகளும் இருக்கின்றன. இவர்கள் துணை செய்ய உதவுவார்களே தவிரத் தனித்து நிற்கப் பயன்படமாட்டார்கள். குறிப்பிட்ட சில ஊர்களில் குறிப்பிட்ட சில ஆதரவாளர்களை இவர்கள் தமக்காக்கி வைத்திருக்கிறார்கள். அவ்வளவே!

கூட்டமைப்பில் இருந்த குழப்பத்தைப் பயன்படுத்தி, தமது பலம் காட்டப்போய் மன முறிவேற்பட்டு முன்னாள் முதலமைச்சர் எனும் 'மண் குதிரையை' நம்பி ஆற்றில் இறங்கப் போன இவர்கள், இன்று அலமந்து நிற்கிறார்கள். அதனால் இவர்களது கட்சிகளும் வரப்போகிற தேர்தலில் சென்றமுறை போலப் பேசப்படப் போவதில்லை.

■ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் 'ஈழ

(13ஆம் பக்கம் பார்க்க)

**(12ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மக்கள் ஜனநாயகக் கட்சி'க்கு அமைச்சுப் பதவியின் பக்கபலம் இருப்பது ஒரு 'பிளஸ் பொயின்ட்'. அத்தோடு டக்ளஸ் என்கின்ற தனி மனிதனின் ஓய்வொழிச்சல் இல்லாத வீரியமான செயற்பாடு மற்றொரு 'பிளஸ் பொயின்ட்'.

ஆனால், இன்றுவரை அக் கட்சி, டக்ளஸ் என்கின்ற ஒருவரை மட்டும்தான் நம்பி இயங்கி வருகிறது. 'தனிமரத் தோப்பாகவே' இருந்து வருகிற அக் கட்சியால், ஓர் தேசிய இனத்தை முழுமையாய்ப் பிரதிநிதித்துவப்படுத்த முடியுமா? என்ற கேள்வி பூதாகரமாய் முன்னிற்கவே செய்கிறது. அதனால் வரப்போகிற தேர்தலிலும் அக் கட்சி, முன்புபோலவே வரையறுக்கப்பட்ட சில இடங்களில் மட்டும் தன் பலத்தைக் காட்டுவதோடு ஓய்ந்து போகும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

■ அடுத்து வருவது, முன்னாள் முதலமைச்சரின் 'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி'. அக்கட்சி உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்ற ஐயப்பாட்டை, அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களே அறிக்கைகள் மூலம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற இடங்களிலெல்லாம் சீர்கேட்டை உருவாக்கியும், நம்பியவர்களையெல்லாம் மோசம் செய்தும், பின் வருபவர்களையெல்லாம் அவ்வப்போது கழற்றிவிட்டும், அக் கட்சியின் தலைவர் எவர்க்கும் அஞ்சாமல் நடந்து கொண்டிருக்கிறார். இவரை நம்பிப் பின்னால் நடக்கத் தொடங்கிய டாக்டர்கள், பத்திரிகையாளர்கள், மற்றைய கட்சிக்காரர்கள், தன் கட்சிக்காரர்கள் எனப் பலரும் இன்று அரசியல் அநாதைகளாகி இருப்பது வெளிப்படை.

கூட்டமைப்பின் நிர்வாகக் கோளாறுகளால் சலிப்படைந்த மக்களின் மனநிலையைத் தனதாக்கியும், ஞானி போன்ற தன் தோற்றக் கவர்ச்சியைப் பயன்படுத்தியும், முன்பு வகித்த உயர் பதவியால் பெற்ற மதிப்பைக் கொண்டும், சென்றமுறை தந்திரமாகப் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த இவரது உண்மை முகத்தை, இப்போது மக்கள் நன்றாக இனங்கண்டு கொண்டு விட்டபடியால், இவரது அல்லது இவரது கட்சியினது பாதிப்பு வரும் தேர்தலில் சிறிதளவும் இராதென்றே நினைக்கிறேன்.

■ பேரினக் கட்சியினோடு உள்வரப்போகிற ஒரு சில 'தனியர்'களின் நிலையும் மொத்தத் தமிழ் அரசியலைப் பெரியளவில் பாதிக்காது என்பது நிச்சயம்.

■ நிறைவாக, எஞ்சியிருப்பது 'தமிழரசுக் கட்சி' ஒன்றே. வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ்மக்களின் ஒருமித்த அங்கீகாரம், புலம்பெயர் தமிழர்களிடம் பெற்றிருக்கும் அங்கீகாரம், தமிழர் பிரச்சினையில் உலகநாடுகள் தரும், மற்றைய தமிழ்க் கட்சிகளுக்கில்லாத தனித்த அங்கீகாரம், அயல்நாடான இந்தியாவின் அங்கீகாரம், இனப்பிரச்சினைத் தீர்வில் சிங்கள ஆட்சியாளர்கள் இக்கட்சிக்குத் தரும் முக்கியத்துவம், நீண்டநாள்களாகத் தமிழனத்தை வழிநடத்திவரும் வரலாற்றுச் சிறப்பு, ஜனநாயகத்தைத் தொடர்ந்து பேணிவருவதால் பெற்ற மரியாதை எனப் பல தகுதிகளைத் தன்னகத்தே அடக்கி, தேர்தல் போட்டியில் மற்றவர்களை விலத்தி முன்னால் ஓடப் போகிற குதிரையாக இக் கட்சியே இருக்கப் போகிறது.

ஆனால், மற்றவர்களைப் பின்தள்ளி ஓடப்போகிற இக் குதிரைக்கு, எதிராளிகளால் இருக்கும் ஆபத்தைவிட அதனை வளர்ப்பவர்களால் வரப்போகும் ஆபத்தே அதிகமாக இருக்கும் என்று தோன்றுகிறது. பதவி ஆசையால் ஒருவருக்கொருவர் கால்தடம் போட்டு, அக் கட்சியின் உறுப்பினர்கள் இயங்குவது கண்டு, அக் கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் கண்ணீர் வடித்து நிற்கின்றனர்.

பிற்கால இளைஞர்கள் செய்த தியாகங்களோடு ஒப்பிடுகையில், ஒன்றுமே இல்லாத தங்களது தியாகப் பதாதைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டும், கட்சியின் முக்கியப் பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டும், 'இன்னும் நாங்கள் தான் இக் கட்சிக் குதிரையை ஓட்டுவோம்' என்று விடாப்பிடியாக உட்கார்ந்திருக்கின்ற, இயங்க முடியாத கிழட்டு 'ஜொக்கி'களைக் கழற்றிவிட்டு, புதிய ஆற்றல்மிக்க இளைய 'ஜொக்கி'களைக் குதிரையில் ஏற்றுவதே இக் கட்சி உருப்படுவதற்குச் செய்யவேண்டிய முதற் காரியம்.

குதிரையில் ஏறப்போகும் இளைய 'ஜொக்கி'களும் தமக்குள் தாம் சண்டை பிடித்துக் கொள்ளாமல், ஒன்றாக அக் குதிரையில் ஏறி ஓட்டப் பழகவேண்டும். அல்லது ஒருவரை ஓட்டவிட்டு, ஓட்டுபவர்க்கு மற்றவர் துணைசெய்து வெற்றியைத் தமதாக்க வழி செய்யவேண்டும். இச் செயல் தவறுமானாலும், வெற்றி பெறவேண்டிய இக் குதிரை வீணாகத் தோற்கும் என்பதில் ஐயமில்லை.

அக் கட்சியைச் சார்ந்தவர்கள் மேற்சொன்ன உண்மைகளை உணர்ந்து, வெகு விரைவில் நிதானத்திற்கு வந்து செயற்பட ஆரம்பிக்க வேண்டும். கிடைத்தற்கரிய வாய்ப்பு இக் கட்சியை நோக்கி வருகிறது. அதனைச் சரியாகப் பயன்படுத்தாமல் விடுகிற அளவிற்கு இக் கட்சியினர் முட்டாள்களாக இருக்க மாட்டார்கள் எனத் தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

**சல்லடையார் சலிப்பு:- வாரிதியார் அரசியல் ஆய்வாளர் ஆகிவிட்டார் போல....**

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் யார் என்ற உண்மை தனக்குத் தெரியும் என்கிறார் மைத்திரி

## நீதிமன்றம் கேட்டால் வெளிப்படுத்த அவர் தயாராம்

"உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உண்மையில் யார் மேற்கொண்டனர் என்பது எனக்குத் தெரியும். நீதிமன்றம் கோரிக்கை விடுத்தால், அதனை வெளிப்படுத்துவதற்கு நான் தயார்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –



"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எவ்வாறு நடைபெற்றது என்பது எனக்குத் தெரியும். கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் பயங்கரவாதிகள் தொடர்பிலான விடயம் சரியானது.

என்னால் கைது செய்யப்பட்டவர்களே நீதிபதிகள் குழாத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உண்மையாகவே யார் செய்தார் என்பதனை எவரும் இன்னும் கூறவில்லை.

இது தொடர்பில் கருத்துக் கூறுமாறு நீதிமன்றம் என்னிடம் கோரிக்கை விடுத்தால், அல்லது உத்தரவு பிறப்பித்தால், யார் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டார்கள் என்பதனை கூறுவதற்கு தான் தயாராகவுள்ளேன்.

எவ்வாறாயினும், அதனை மிகவும் இரகசியமாக பேணுவது நீதிபதிகளின் பொறுப்பு." – என்றார்.

# இராணுவச் சிப்பாயும், இளம் யுவதியும் களு கங்கையில் மூழ்கி பரிதாபச் சாவு!



இரத்தினபுரி – கிரியெல்ல, எல்லகாவ பிரதேசத்தில் களு கங்கையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந் துள்ளனர்.

எல்லகாவ பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய யுவதி யும், ஹொரொவப்பொத்தான பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இராணுவச் சிப்பாயுமே இவ்வாறு உயிரிழந்துள் ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிரியெல்ல வைத்தியசா லையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிரியெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளத்தில் கோர விபத்து! குடும்பப்பெண் உயிரிழப்பு!!

## இரு பிள்ளைகள் உட்பட மூவர் படுகாயம்



**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் – கொட்டுக்கச்சிய , கல்லகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் பலத்த காயங்களுடன் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

ஆனமடுவ, வேம்புவெவ பகுதியைச் சேர்ந்த ஆர்.எம். குசுமலதா மல்காந்தி (வயது 43) எனும் மூன்று பிள்ளைக ளின் தாயே விபத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் புத்தளம் தலைமையகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது தந்தையைப் பார்ப்பதற்காக மேற்படி தாய் தனது மூன்று பிள்ளைகளுடன் வருகை தந்த பின், ஆன மடுவ வேம்புவெவ கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது ஆனமடுவையில் இருந்து வந்த தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

இந்த விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் ஸ்தலத்தி லேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் தாயுடன் பயணித்த இரண்டு பிள்ளைகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், இந்த விபத்தின்போது வீதியில் கவிழ்ந்ததில் அந்த லொறியின் சாரதியும் படுகாயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் போதிய இட வசதி இல்லாத காரணத்தால் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த தான் புத்தளத்தில் இருந்து ஆனமடுவைக்குப் பஸ்ஸில் சென்றதாக உயிரிழந்த பெண்ணுடன் வைத்தியசாலைக்கு வந்த மற்றுமொரு மகள் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவு தரும்

## அந்நாட்டின் தூதர் மிசுகோஷி ஹிடேகி தெரிவிப்பு









"வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொடுப்பேன்."

– இவ்வாறு இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி தெரிவித்தார்.

நில மானிய முறைமை சமூகத்திலிருந்து புதிய ஆட்சி முறையை நோக்கிய ஜப்பானின் பயணத்திற்கும் இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளை சுட்டிக்காட்டிய தூதுவர், ஜப்பான் மீள் எழுச்சி காலத்தில் வெளிப்படுத்திய ஈடுகொடுக்கும் இயலுமையை இலங்கை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

"ஜப்பானிடம் இருந்து இலங்கை கற்க வேண்டிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் நவீனமயமாக்கல் பாடங்கள்" என்ற தலைப்பில் **'Geopolitical Cartographer'** சர்வதேச ஆராய்ச்சி அமைப்பினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பு கிரான்பெல் ஹோட்டலில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஜப்பானின் நவீனமயமாக்கல் மூலம் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நிர்வாகத்திற்கு கற்க வேண்டிய பாடங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய தூதுவர், ஜப்பானின் வரலாற்றில் கடந்து வந்த சவால்களுக்கு ஈடு கொடுத்து, நவீன மாற்றங்களுக்கு ஏற்றவாறு விரைவான வளர்ச்சியை நோக்கி நகர்ந்த அனுபவங்களை இதன்போது விவரித்தார்.

அத்துடன், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜப்பான் சர்வதேச அளவில் எதிர்கொள்ள வேண்டியிருந்த சவாலான சூழ்நிலையை தூதுவர் தனது உரையில் நினைவு கூர்ந்தார்.

உலகமே ஜப்பானுக்கு எதிராக நின்றபோது, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கூற்று காரணமாக, போருக்குப் பின்னரான காலப்பகுதியில் ஜப்பான் மீண்டும் சர்வதேச சமூகத்துடன் இணைவதற்கு வழியமைத்ததையும் தூதுவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

இந்த சந்தர்ப்பத்தை ஜப்பான் அந்நாட்டின் முன்னேற்றம் மற்றும் மீள் கட்டமைப்புக்காக பயன்படுத்திக் கொண்டதெனவும் அவர் கூறினார்.

அன்று தொடக்கம் இன்று வரையில் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நட்புறவு காணப்படுவதோடு, அந்த நட்புறவை இருநாட்டு தலைவர்களும் மேலும் வலுவாக முன்னெடுத்துச் செல்கின்றனர் எனவும் ஜப்பான் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்திற்கு அமைய பொருளாதார சீர்திருத்தங்களுக்காக அர்பணிப்புடன் செயற்பட்டுவரும் இலங்கை, ஜப்பானை முன்மாதிரியாகக் கொண்டு நாட்டில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஜப்பானை போன்று போட்டித் தன்மை மிக்க தொழில்துறையை கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர், போட்டித் தன்மை நிறைந்த ஏற்றுமதி கைத்தொழில்களை உருவாக்குவதற்காக தொழில் கொள்கைகளைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும், அதன் கீழ் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் ஊழல் தடுப்பு முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த மிசுகோஷி ஹிடேயாகி, அந்த முயற்சிகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவை வலுப்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் வேலைத் திட்டத்தின் கீழ் ஜப்பான் உதவிகளை வழங்கும் என்றும், இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட பல்வேறு முயற்சிகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களின் ஊடாக ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக ஜப்பானின் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவசர சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் பருத்தித்துறை வைத்தியசாலையில் திறப்பு

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)






# ஆற்றில் பாய்ந்து தப்பிய கள்ளனைப் பிடிக்க ட்ரோன் உதவியுடன் தேடுதல் நடவடிக்கை!

## நற்பிட்டிமுனை - பாண்டிருப்பு எல்லையில் சம்பவம்

**(பாறுக் ஷிஹான்)**

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஆற்றில் பாய்ந்த நிலையில் அவரைப் பிடிக்கத் தேடுதல் நடவடிக்கையில் கல்முனை தலைமையக பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சில பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் அண்மையில் வீதியில் சென்ற பெண் ஒருவரின் தங்க மாலையை அறுத்த சந்தேக நபர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸ் குழு நற்பிட்டிமுனை – பாண்டிருப்பு எல்லைப் பகுதிக்கு சென்றுள்ளது.

நேற்று முற்பகல் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய – சுமார் 40 வயதுடைய – சந்தேக நபரை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு தயாரான நிலையில் சந்தேக நபர் தம்வசம் இருந்த தங்க மாலையை ஆற்றில் எறிந்து தானும் அதில் குதித்து மாயமாகியுள்ளார்.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சந்தேக நபரை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். பின்னர் கடற்படையினர் ட்ரோன் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையை நேற்று மாலை தொடர்ந்தனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம். எல்.புத்திகவின் வழிநடத்தலில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டருமான அலியார் றபீக் தலைமையில் பொலிஸார் மாலை வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.





# நாட்டில் மிக வேகமாக பரவும் டினியா தொற்று

நாட்டில் தற்போது டினியா (Tinea Infection) எனப்படும் தோல் நோய் வேகமாக பரவி வருவதாக வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் இடையே இந்த நோய் பரவி வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தோல் நோய் நிபுணர் வைத்தியர் ஜானக அகரவிட்ட தெரிவித்துள்ளார்.

தோலில் அரிப்பு ஏற்படுவதே இதன் பிரதான அறிகுறி என அவர் தெரிவித்துள்ளார்.

அதிக வியர்வை மற்றும் ஈரலிப்பான இடங்களில் இந்த நோய் வேகமாக பரவும் என வைத்தியர் ஜானக அகரவிட்ட தெரிவித்துள்ளார்.



தொழில் செய்யும் இடங்களிலும் வீட்டில் உள்ளவர்களிடையேயும் ஒரே உடையை மாற்றி அணிபவர்களிடையேயும் இத்தொற்று வேகமாக பரவக்கூடுமென வைத்தியர் ஜானக அகரவிட்ட தெரிவித்துள்ளார்.

இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த முறையான சிகிச்சை எடுத்துக்கொள்வது அவசியம் எனவும் நோய் நிலைமை குறைவடையாத பட்சத்தில், வைத்தியசாலைக்கு சென்று, இதுவரை எடுத்துக்கொண்ட சிகிச்சைகளின் விவரங்களை வழங்கி சிகிச்சைகளை பெற்றுக்கொள்வது சிறந்தது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.





# போட்டிக்குச் சேறுபூசும் அரசியல் கலாசாரத்தில் போட்டிக்குப் பணி செய்வதுதான் என் வழிமுறை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திட்டவட்டம் பாடசாலைகளுக்கு பஸ் வழங்க அரசு முட்டுக்கட்டை

எனது அரசியல் பயணத்தின் முக்கிய கொள்கை என்ன என்று யாராவது கேட்டால், “போட்டிக்கு வேலை“ செய்வது என்றுதான் சொல்ல வேண்டும். போட்டிக்கு வேலை செய்ய மிகவும் தயாராக இருக்கிறேன். தனி நபர்களை விமர்சிக்கவோ, அவமரியாதை செய்யவோ முற்படாது, நாட்டுக்காக சேவை செய்வதே முதற் பணி என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் காலத்தில் காமினி திஸாநாயக்க, லலித் அதுலத்முதலி, ரணசிங்க பிரேமதாஸ போன்றவர்கள் போட்டிக்கு சேவை செய்தமையாலயே கமுதாவ, மஹ பொல, மஹவெலிய போன்ற திட்டங்களை நாட்டுக்காக ஆற்றினர். இவ்வழியில் தானும் பயணித்து நாட்டுக்கு பெறுமானம் சேர்க்கும் பணிகளை ஆற்றிவருகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இலட்சக்கணக்கான புதிய தொழில்முனைவோரை உருவாக்கும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது கபட நாடகம் ஆடுபவர்கள் சேறுபூசி வருகின்றனர். அரச அதிகாரம் இல்லாமல் இதையெல்லாம் செய்து வருகிறோம். இந்தத் தூய எண்ணம் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதே பிரதான நோக்கம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹோமாகம மத்திய மகா வித்தியாலய நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான ஆடைகளை கொள்வனவு செய்ய 827,000 ரூபா நன்கொடை வழங்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்ட போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

பிரபஞ்சம் பஸ் வழங்கும் திட்டத்தில் பஸ்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்தியுள்ளது.

பிரபஞ்சம் பாடசாலை பஸ் வழங்கும் திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான பஸ்களை இறக்குமதி செய்வதற்கான உரிய அனுமதிப் பத்திரங்கள் இன்னும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கவில்லை. அனுமதி கிடைத்தால்



மேலும் பல பாடசாலைகளில் பஸ் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும். இந்த பஸ் திட்டத்தால் தனக்கு எந்த வருமானமும் கிடைக்காது என்றும், இதன் பலன்கள் நாட்டிலுள்ள 41 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கே கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டில் அடக்குமுறையை எதிர் நோக்கும் 220 லட்சம் மக்களை துன்பங்களில் இருந்து விடுபடச் செய்ய தனது 24 மணி நேரத்தின் பெரும் பகுதியை அர்ப்பணிப்பதுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.









## ஐ.தே.க. யாழ் மாவட்ட அமைப்பாளர் யார்?

# என்னிடம் கேட்க வேண்டாம் ஜனாதிபதியிடம் கேளுங்கள்!



(பிரபாகரன் டிலக்சன்)

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் நியமனம் தொடர்பில் தான் பதிலளிக்க விரும்பவில்லை எனவும், கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமாகிய ரணில் விக்கிரமசிங்கவிடம் வினாவுமாறு முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐ.தே.கவின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது. இதில் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொண்டிருந்தார்.

நிகழ்வின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் நியமனம் தொடர்பில் விஜயகலா மகேஸ்வரனிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போது தான் இதற்கு பதிலளிக்க விரும்பவில்லை எனவும், கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமாகிய ரணில் விக்கிரமசிங்கவிடம் இதுபற்றி வினாவுமாறும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக அருண் சித்தார்த்தை நியமிப்பதாக கட்சியின் பிரதித் தலைவர் ரவி கருநாயக்க தெரிவித்திருந்தார்.

எனினும் யாழ் மாவட்ட அமைப்பாளர் நியமனம் எதுவும் இடம்பெறவில்லை என கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமாகிய ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை விரைவில் இலங்கை முடிக்குமாம்

இந்தியா , பாரிஸ் கிளப் உள்ளிட்ட இருதரப்பு கடன் வழங்குநர்கள் குழுவுடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை இலங்கை விரைவில் நிறைவு செய்யவுள்ளது என "தி ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு அமைய, அதிகபட்சமாக 6 வருடங்கள் கடன் சலுகைக் காலம் வழங்கப்படவுள்ளது.

கடனை மீளத் திருப்பிச் செலுத்தும்போது, ஏற்கனவே அறவிடப்படவுள்ள வட்டியும் குறைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக "தி ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா, பாரிஸ் கிளப் உள்ளிட்ட 17 இருதரப்பு கடன் வழங்கும் நாடுகள் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

சீனா இந்த குழுவில் அங்கம் வகிக்கவில்லை என்பதுடன், அந்நாடு கண்காணிப்பு மட்டத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கின்றது.

சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனை மீள செலுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் ஏனைய கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் என இலங்கை ஏற்கனவே வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பெரும்போக நெல் கொள்வனவிற்காக 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

பெரும்போக நெல் கொள்வனவிற்காக 1000 மில்லியன் (நூறு கோடி) ரூபா நிதி கிடைத்துள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்தது.

திறைசேரியிலிருந்து 500 மில்லியன் ரூபாவும் விவசாயிகள் நம்பிக்கை நிதியத்திலிருந்து 500 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பெரும்போக நெல் கொள்வனவிற்காக வேளாண்மை மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து நாள்களில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 9 லட்சத்து 4 ஆயிரத்து 202 கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, 95 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும், 7 வலயங்களிலுள்ள 241 நெல் களஞ்சிய சாலைகள் நெற்கொள்வனவிற்காக தாயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்தது.

நாடு 105 ரூபாவிற்கும், சம்பா 120 ரூபாவிற்கும், கீரி சம்பா 130 ரூபாவிற்குமாக நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.03.2024




அனுசரித்து விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும். தியானம் அல்லது பிரார்த்தனை செய்வதற்கு இன்றைய நாள் ஏற்றது.

உங்கள் செயல் திறனுக்கு விமர்சன ரீதியான பாராட்டுக்கள் கிடைக்கும். உங்களின் சிறப்பான தகுதிகளை வெளிக்கொணர்ந்து வெற்றி பெறுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கலாம்.

உங்கள் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

நீங்கள் திடமாக காணப்படுவீர்கள். இது உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கும்.




ஷஇன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். திரைப்படம் பார்த்தல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழ்நிலை காணப்படும். சில சமயங்களில் உங்கள் பொறுமையை இழப்பீர்கள். உங்களின் நாணயம் சந்தேகிக்கப்படலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். சகஜமாக நடந்து கொள்வது நல்லது.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சிகரமாக இருக்காது. கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று செலவுகள் ஏற்படும்.

கால் வலி மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்கள் செயல்களை அறிவுப்பூர்வமாக அணுக வேண்டியது அவசியம். இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சில கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பரமரிக்க சிறப்புடன் திட்டமிட வேண்டும்.

இன்று ஆரோக்கியம் மிதமாக இருக்கும். கால்களில் வலி மற்றும் விறைப்புத்தன்மை ஏற்படலாம். இதனால் கவலை ஏற்படும்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் எதிர்காலத்துக்காக உங்களை முன்னேற்றிக் கொள்ளும் வழி வகைகள் கிடைக்கும். எதிர்மறையான போக்கை தவிர்ப்பதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலைகளை தவிர்க்க உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது சர்ச்சைக்குரிய விஷயங்களை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பது கடினமாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

பதற்றம் காரணமாக உங்கள் கால்களில் வலி ஏற்படலாம்.




இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை தரும் எண்ணங்களை தவிர்த்து நேர்மறையாக எண்ணினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று உறுதியான மனநிலையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறிருந்தால் தடைகளை சமாளித்து பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும்.

சில குடும்ப பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் இருவரிடையே கருத்து வேற்பாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் கிடையாது. கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று உணர்ச்சிவசப்பட்டு காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த பிரார்தனை மேற்கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். கூடுதல் பணிச்சுமைகள் உங்களுக்கு கவலையை அளிக்கும். சிறந்த பலனைக் காண நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்போடு பழக வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது சிறிது பதற்றமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாகக் கையாள்வீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உறவின் பிணைப்பை வலுபடுத்தும்.

நீங்கள் பங்குகளில் செலுத்தும் பணம் லாபத்தை அளிக்கும். எதிர்பாராத பண வரவிற்கு சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.03.2024

## தனுசு

இன்று மிகவும் சாதகமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை மூலம் நெருக்கமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

பணியிடத்து சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களால் பாராட்டப் படும்.

உங்கள் காதலரை இன்று மாலை சந்தித்து மகிழ்ச்சியுடன் இருக்கலாம். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையை மகிழ்விக்க லாம்.

இன்று பண வரவு மகிழ்ச்சி தரக் கூடியதாக இருக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

## மகரம்

இன்று உங்களிடம் அமைதியின்மை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடு வதன் மூலம் இந்த சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். உங்கள் எதிர் கால வளர்ச்சி குறித்து கவலைப்படு வீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக இயற்ற நீங்கள் திட்டமிட வேண்டும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவை யில்லாத செலவினங்கள் ஏற்படும். கவனமாக திட்ட மிடவும்.

## கும்பம்

இன்று பலன்கள் தாமதமாக கிடைக் கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று மகிழ்சிகரமான நாளாக காணப் படாது. இன்று அதிகமான எதிர்பார்ப்பு கூடாது.

அதிகமான பணிகள் கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பரா மரிக்க தவறுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைக்க இனிமையான வார்த்தைகளை பேசுங்கள்.

நிதிநிலைமை அதிருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் நிதி தேவைகளை சௌகரியமாக கையாளும் சூழ்நிலை இன்று இருக்காது.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுங்கள்.

## மீனம்

இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் வளர்ச்சிக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத் துக்கு முன் முடிக்க இயலும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் சில மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சொத்துகள் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் உடல் நலம் சிறப்பாக இருக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.









# சில அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைத்தது சதொச

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சில அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதன்படி, 650 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

1,050 ரூபாவாக இருந்த சிவப்பு கௌபீயின் விலை 52 ரூபாவினாலும், 1,150 ரூபாவாக இருந்த வெள்ளை கௌபீயின் விலை 50 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 670 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பாஸ்மதி அரிசியின் விலை 20 ரூபாவினாலும், ஒரு கிலோகிராம் சிறிய வெங்காயம் 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், 270 ரூபாவாக இருந்த வெள்ளை சீனி மற்றும் 430 ரூபாவாக இருந்த சிவப்பு சீனி என்பவற்றின் விலை ஐந்து ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

## கெஹெலியவின் பிணை மனு திங்களன்று மேல் நீதிமன்றில்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள சீராய்வு மனுவை எதிர்வரும் திங்கள் கிழமை விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான ஆவணங்கள் தமக்கு கிடைக்கவில்லை என சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் அறிவித்தார்.

இதன்படி, உரிய ஆவணங்களை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்குமாறு மனுதாரர்களுக்கு அறிவித்த நீதிபதி, மனுவை எதிர்வரும் திங்கள் கிழமை பரிசீலனைக்கு அழைக்குமாறும் உத்தரவிட்டார்.

## ரி56 ரக ரவைகள், ஹெரோயினுடன் வவுனியாவில் இளைஞர் ஒருவர் கைது



(கே.வசந்தன்)

வவுனியாவில் ரி56 ரக ரவைகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது செட்டிக்குளம் காந்தி நகர் பகுதியில் ரி56 துப்பாக்கி ரவைகள் 13 உம், 1005 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிக்குளம் காந்தி நகர் பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படை.யினரால் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.பி.எல். தொடர்-2024
# சென்னைக்கு முதல் வெற்றி




நடப்பு ஆண்டின் ஐ.பி.எல். தொடரின் முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் முதல் வெற்றியைப் பதிவுசெய்தது.

2024ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் முதல் இருபது-20 போட்டி நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் – ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி, முதலில் துடுப்பெடுத்தாடி 173 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணியின் டு பிளெஸிஸ் (35), அனுஜ் ராவத் (48), தினேஷ் கார்த்திக் (38) ஆகியோர் சிறப்பாக ஆடியிருந்தனர்.

சென்னை சார்பாக பந்துவீச்சில், முஸ்டாபிஜுர் ரஹ்மான் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 174 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி களமிறங்கியது.

அணித்தலைவர் ருதுராஜ் கெய்க் வாட், ரச்சின் ரவீந்திரா ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

4 ஓவர்களில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 38 ஓட்டங்களாக இருந்தபோது ருதுராஜ் கெய்க்வாட் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அடுத்து ரவீந்திராவுடன் ரகானே ஜோடி சேர்ந்தார்.

சென்னை அணி 5.3 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கடந்தது.

பின்னர் அணியின் ஓட்ட எண்ணிக்கை 71ஆக இருந்தபோது 7ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் ரவீந்திரா (37) ஆட்டமிழந்தார்.

ரகானே தனது பங்குக்கு 27 ஓட்டங்களையும் டேரில் மிட்செல் 22 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

கடைசி ஐந்து ஓவர்களில் 46 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது, துபேயுடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இருவரும் அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றனர்.

இறுதியில் 18.4 ஓவர்களில் இலக்கை எட்டி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அபார வெற்றி பெற்றது.

ஷிவம் துபே 34 ஓட்டங்களுடனும், ஜடேஜா 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் நின்றனர்.

ஆட்டநாயகனாக சென்னையின் முஸ்டாபிஜுர் ரஹ்மான் தெரிவானார்.

